
**மே – 03**

# TNPSC துளிகள்

- 21 வகை குறைபாடுகளைக் கண்டறியவும், பள்ளிகளில் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளை (CWSN) முன்கூட்டியே பரிசோதிக்கவும், சான்றிதழ் பெறுவதை எளிதாக்கவும், மாணவர்களை சமக்ர சிக்ஷாவுடன் இணைக்கவும் இந்திய அரசு பிரசாஸ்ட் 2.0 எனும் திட்டத்தைத் தொடங்கவுள்ளது.
- 2026 ஆம் ஆண்டின் லண்டன் மாரத்தான் போட்டியில் கென்யா நாட்டைச் சார்ந்த செபாஸ்டியன் சாவே 1 மணி 59 நிமிட 30 வினாடிகளில் பந்தயத்தை முடித்து, அதிகாரப் பூர்வ மாரத்தான் போட்டியில் இரண்டு மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் ஓடிய முதல் தடகள வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.
- சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பானது (FIDE), சர்வதேச உலக விளையாட்டு சங்கத்தின் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது; லொசேன் நகரில் நடந்த அதன் வருடாந்திரப் பொதுக்குழு கூட்டத்தில் இந்த முடிவு அங்கீகரிக்கப்பட்டது.
- இந்தியப் பாரம்பரிய இசைக் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் 13-வது சுர் ஜோத்ஸ்னா தேசிய இசை விருதுகள் புது தில்லியில் நடைபெற்றன, இதில் இந்துஸ்தானி பாடகர்களான சுமித்ரா குகா மற்றும் பண்டிட் லக்ஷ்மன் கிருஷ்ணராவ் பண்டிட் ஆகியோரின் வாழ்நாள் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
- கூகுள் நிறுவனமானது விசாகப்பட்டினத்தில் 15 பில்லியன் டாலர் மதிப்பில் செயற்கை நுண்ணறிவு (AI) மையத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது; இதில் செயற்கை நுண்ணறிவு மேம்பாடு மற்றும் பெரிய அளவிலான தரவுச் செயலாக்கத்தை ஆதரிக்கும் ஆற்றல் திறன் கொண்ட "பசுமை" தரவு மையங்களும் அடங்கும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டின் கடல் மீன் உற்பத்தி




| TOP 5 STATES IN MARINE FISH LANDINGS (2025) | | |
|---|---|---|
| 1 | Tamil Nadu | 6.85 lakh tonnes (+1% YoY) |
| 2 | Gujarat | 6.43 lakh tonnes (-15% YoY) |
| 3 | Kerala | 6.24 lakh tonnes (+2% YoY) |
| 4 | Karnataka | 5.78 lakh tonnes (+44% YoY) |
| 5 | Maharashtra | 3.66 lakh tonnes (+18% YoY) |

- 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் கடல் மீன் உற்பத்தியில் (பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு) தமிழ்நாடு மிக உயர்ந்த பதிவைப் பெற்றுள்ளது.
- மாநிலத்தின் மீன் உற்பத்தி சுமார் 6.85 லட்சம் டன்களாக இருந்தது; இது 2024-ஆம் ஆண்டில் இருந்த 6.79 லட்சம் டன்களை விட சற்று அதிகமாகும்.
- 2025 ஆம் ஆண்டில் 6.43 லட்சம் டன்கள் மீன் பிடித்த குஜராத்தை தமிழ்நாடு முந்தியது.
- மொத்த மீன் உற்பத்தியில் இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளின் பங்களிப்பு 71.7% ஆகவும், அதனைத் தொடர்ந்து மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளின் பங்களிப்பு 28.2% ஆகவும் உள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம் (23%) இதில் அதிகப் பங்கைப் பதிவு செய்துள்ளது, அதைத் தொடர்ந்து தூத்துக்குடி (16%) மற்றும் புதுக்கோட்டை (14%) உள்ளன.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் டாப்ளர் வானிலை ரேடார் விரிவாக்கம்





- 2026 ஆம் ஆண்டிற்குள் இந்தியா தனது டாப்ளர் வானிலை ரேடார் கட்டமைப்பை 50 அலகுகளாக விரிவுபடுத்தி, நாடு முழுவதும் வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்தி உள்ளது.
- ரேடார்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டில் 14-ஆக இருந்ததில் இருந்து 50-ஆக உயர்ந்துள்ளது, இது வலையமைப்பில் 250% க்கும் அதிகமான வளர்ச்சியைக் காட்டுகிறது.
- இந்த ரேடார்கள் இப்போது இந்தியாவின் 87% பகுதிகளை உள்ளடக்கி, வானிலை நிலவரங்களை சிறப்பாகக் கண்காணிக்க உதவுகின்றன.
- புயல்கள், பலத்த மழை மற்றும் இடியுடன் கூடிய மழையைத் துல்லியமாகக் கணிக்க உதவுவதன் மூலம், பேரிடர் முன்னேற்பாடுகளை இவை மேம்படுத்துகின்றன.
- இந்த அமைப்பை மௌசம் திட்டத்தின் கீழ் இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) நிர்வகிக்கிறது.
- முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் வானிலை சேவைகளை வலுப்படுத்த மேலும் சுமார் 50 ரேடார்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## சேவை உற்பத்தி குறியீடு

- மாதாந்திர அடிப்படையில் சேவைகளின் உற்பத்தியைக் கண்காணிக்க 'சேவை உற்பத்தி குறியீட்டை' (ISP) அறிமுகப்படுத்துவதற்கான அணுகுமுறை அறிக்கை ஒன்றை புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டது.
- தொழில்துறைக்கான 'தொழில்துறை உற்பத்தி குறியீட்டை' (IIP) போன்று, ISP ஆனது சேவைத் துறையின் செயல்பாட்டை ஒவ்வொரு மாதமும் அளவிடும்.
- இது 2024-25 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்துகிறது மற்றும்

முக்கியமாக GST தரவுகள் மற்றும் அதிகாரப்பூர்வ அரசு தரவு ஆதாரங்களை நம்பி உள்ளது.

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சேவைகள் துறை பாதிக்கும் மேல் பங்கு வகிக்கிறது, ஆனால் தற்போது முறையான மாதாந்திர உற்பத்தி சார்ந்த குறியீடு ஏதும் இல்லாததால் இது அவசியமாகிறது.
- தற்போது, கொள்கை வகுப்பாளர்கள் வாங்குதல் மேலாளர்கள் குறியீட்டையே சார்ந்து உள்ளனர்; இது கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டது மற்றும் உண்மையான உற்பத்தியை அளவிடுவதில்லை.




## திருமணமின்றி இணைந்து வாழும் உறவு முறிவு – உச்சநீதிமன்றம்





- பரஸ்பர சம்மதத்துடன் கூடிய லிவ்-இன் (திருமணமின்றி ஒன்றாக வாழும்) உறவை முடித்துக் கொள்வது குற்றவியல் சட்டப்படி குற்றம் அல்ல என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- பிரிந்த பிறகு, விருப்பத்தின் பேரில் அமைந்த உறவைப் பாலியல் வன்கொடுமை அல்லது சுரண்டலாகக் கருத முடியாது என்று நீதிமன்றம் கூறியது.
- சட்டத்தின் கீழ் லிவ்-இன் உறவுகளுக்கு திருமணத்திற்கு இணையான சட்டப்பூர்வ அந்தஸ்து இல்லை என்பதை அது தெளிவுபடுத்தியது.

- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) பிரிவு 125-இன் கீழ் குழந்தைக்கான பராமரிப்புச் செலவை கோர பெண்ணுக்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.
- 2005-ஆம் ஆண்டின் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் "திருமணத்தின் தன்மையிலான" உறவுகளை உள்ளடக்கியது என்பதை நீதிமன்றம் குறிப்பிட்டது.
- இது போன்ற வழக்குகளில் குற்றவியல் பொறுப்பைத் தீர்மானிப்பதில் 'சம்மதம்' என்பது முக்கியமானது என்று இத்தீர்ப்பு வலியுறுத்தியது.

# சர்வதேசச் செய்திகள்

## SCO அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் 2026





- கிர்கிஸ்தானின் பிஷ்கெக் நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில், பயங்கரவாதத்திற்கு எதிரான தனது நிலைப்பாட்டை இந்தியா முன்னிலைப்படுத்தியது.
- பயங்கரவாதத்தின் மீதான தனது சகிப்புத் தன்மையற்ற கொள்கைக்கு உதாரணமாக 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை இந்தியா சுட்டிக்காட்டியது.
- பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் அல்லது அடைக்கலம் கொடுக்கும் நாடுகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க SCO உறுப்பு நாடுகளை இந்தியா வலியுறுத்தியது.
- பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை மையமாகக் கொண்ட தியான்ஜின் பிரகடனத்தை (2025) அது சுட்டிக் காட்டியது.
- தீவிரவாதத்தை எதிர்கொள்வதில் பிராந்தியப் பயங்கரவாத தடுப்பு அமைப்பின் (RATS) பங்கை இந்தியா சிறப்பித்துக் கூறியது.

## WTO அமைதி விதியை பயன்படுத்திய இந்தியா

- 7.6 பில்லியன் டாலர் மதிப்பிலான அரிசி மானியங்களுடன் உலக வர்த்தக அமைப்பின் (WTO) அமைதி விதியை இந்தியா 7-வது முறையாகப் பயன்படுத்தியுள்ளது.
- 2013 ஆம் ஆண்டில் பாலியில் நடைபெற்ற WTO அமைச்சர்கள் மாநாட்டில், இந்த அமைதி விதி ஒரு இடைக்கால ஏற்பாடாக ஒப்புக் கொள்ளப் பட்டது.
- உணவுப் பாதுகாப்பிற்கான பொது இருப்பு திட்டங்களின் கீழ் வளரும் நாடுகள் மானியங்களை வழங்க இது அனுமதிக்கிறது.

- வரம்புகள் மீறப்பட்டாலும், WTO-வின் தகராறு தீர்வு அமைப்பில் எழும் சட்டரீதியான சவால்களிலிருந்து இத்தகைய மானியங்களை இது பாதுகாக்கிறது.
- இந்த மானியங்கள், அரசால் பயிர்கள் கொள்முதல் செய்யப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் (MSP) தொடர்புடையவை.
- உலக வர்த்தக அமைப்பில் உணவுப் பாதுகாப்புக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை இது ஒரு தற்காலிக நடவடிக்கையாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## PaRRVA கட்டமைப்பு




- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI), கடந்தகால அபாயம் மற்றும் வருவாயைச் சரிபார்க்கும் முகமையை (PaRRVA) செயல்பாட்டிற்குக் கொண்டு வந்து உள்ளது.
- இது நிதிச் சந்தை நிறுவனங்களின் கடந்தகால அபாயம் மற்றும் வருவாய் குறித்த தரவுகளைச் சரிபார்க்கிறது.
- CARE Ratings நிறுவனமானது PaRRVA-வாக நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் தேசிய பங்குச் சந்தை (NSE) PaRRVA தரவு மையமாகச் (PDC) செயல்படுகிறது.
- இது முதலீட்டு ஆலோசகர்கள், ஆராய்ச்சிச் சேவைகள் மற்றும் நெறிமுறை சார்ந்த வர்த்தகச் செயல்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இது SEBI விதிமுறைகளின்படி விளம்பரங்களில் சரி பார்க்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.
- இது நிதிச் சந்தைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதோடு, தவறான

வழிகாட்டும் உரிமைகோரல்களைக் குறைக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விக்ரம் VT 21 கவச வாகனம்




- ❖ மேம்படுத்தப்பட்ட கவச வாகனங்களுக்கான விக்ரம் VT 21 திட்டத்தைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) தொடங்கியுள்ளது.
- ❖ இது இந்திய இராணுவத்தின் எதிர்கால காலாட்படைப் போர் வாகனத்திற்கான (FICV) சக்கரங்கள் மற்றும் சங்கிலித்தொடர் வாகனங்களை உள்ளடக்கியது.
- ❖ இது பல்வேறு நிலப்பரப்புகளில் அதிக இயக்கத் திறனுடன், தோட்டாக்கள், குண்டு வெடிப்புகள் மற்றும் சிதறல்களுக்கு எதிரான வலுவான கவசப் பாதுகாப்பைக் கொண்டுள்ளது.
- ❖ இது 30 மிமீ ஆளில்லா சுழல் துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கி மற்றும் பீரங்கி எதிர்ப்பு எறிகணைகள் (ATGM) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- ❖ இது நிலம் மற்றும் நீர் ஆகிய இரண்டிலும் இயங்கும் திறனைக் கொண்டுள்ள இது சிறப்பு உந்துவிசை அமைப்புகளைப் பயன்படுத்தி நீரில் செயல்படக் கூடியது.
- ❖ உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன், இந்த அமைப்பின் சுமார் 65% இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ளது.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய காலநிலை இலக்குகள் – இந்தியா

- ❖ பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ், பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கு (UNFCCC) 2031–35 ஆம் ஆண்டிற்கான புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDCs) இந்தியா சமர்ப்பித்து உள்ளது.
- ❖ 2035 ஆம் ஆண்டிற்குள் புதைபடிவமற்ற எரிபொருட்களிலிருந்து 60% மின்சாரத் திறனைப் பெறுதல் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உமிழ்வு தீவிரத்தை 47%

(2005 நிலைகளிலிருந்து) குறைத்தல் ஆகியவை இந்த இலக்குகளில் அடங்கும்.

- ❖ காடுகள் மற்றும் மரங்களின் பரப்பளவை அதிகரிப்பதன் மூலம் 3.5 முதல் 4 பில்லியன் டன் $CO_2$ (கார்பன் டை ஆக்சைடு) உறிஞ்சு திறனை உருவாக்க இந்தியா இலக்கு வைத்துள்ளது.
- ❖ இந்த இலக்குகளை அடைவது வளர்ந்த நாடுகளின் நிதி ஆதரவு, தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றைச் சார்ந்துள்ளது என அது வலியுறுத்தியது.
- ❖ இந்தியா ஏற்கனவே 52.5% புதைபடிவமற்ற எரிபொருள் திறனை அடைந்துள்ளதுடன், உமிழ்வு தீவிரத்தை 36% (2005 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை) குறைத்து உள்ளது.




# மாநிலச் செய்திகள்

## NARIT செயற்கை நுண்ணறிவுக் கருவி

- ❖ போதைப்பொருள் விசாரணைக்காக இந்தியாவிலேயே முதல்முறையாக செயற்கை நுண்ணறிவை (AI) அடிப்படையாகக் கொண்ட 'நாரிட் AI' என்ற கருவியை குஜராத் காவல்துறை உருவாக்கியுள்ளது.
- ❖ NARIT AI ஆனது (போதைப்பொருள் பகுப்பாய்வு மற்றும் மீட்டெடுப்பு-மேம்படுத்தப்பட்ட உருவாக்க அடிப்படையிலான விசாரணை கருவி) போதைப்பொருள் தொடர்பான வழக்குகளைக் கையாளுவதில் காவல்துறைக்கு உதவுகிறது.
- ❖ இது முதல் தகவல் அறிக்கையை (FIR) பகுப்பாய்வு செய்து, விரிவான விசாரணை அறிக்கைகளை உருவாக்குகிறது.
- ❖ இது RAG (மீட்பு மேம்படுத்தப்பட்ட உருவாக்கம்) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதோடு மேலும் இது NDPS சட்டம் (போதைப்பொருள் மற்றும்

மனமயக்கப் பொருட்கள் சட்டம், 1985) போன்ற சட்டங்களைப் பயன்படுத்துகிறது.

- ❖ இது ஆதாரங்களுக்கான சரி பார்ப்புப் பட்டியல்கள், சட்ட வழிகாட்டுதல் ஆகியவற்றை வழங்குவதோடு, நீதிமன்றத்தில் சாத்தியமான எதிர் வாதங்களையும் கணிக்கிறது.




## மகாராஷ்டிர தினம் 2026 - மே 01


- ❖ பம்பாய் மாநிலம் பிரிக்கப்பட்ட பிறகு 1960 ஆம் ஆண்டு மே 1 அன்று மகாராஷ்டிரா மாநிலம் உருவானதை இந்த தினம் குறிக்கிறது.
- ❖ பம்பாய் மறுசீரமைப்புச் சட்டம் (1960)-இன் கீழ் மொழி அடிப்படையில் இந்தப் பிரிவினை செய்யப்பட்டது.
- ❖ இப்போராட்டத்தை சம்யுக்த மகாராஷ்டிர சமிதி (ஐக்கிய மகாராஷ்டிரக் குழு) முன்னெடுத்தது.
- ❖ தனி மாநிலத்திற்கான கோரிக்கை சுதந்திரத்திற்கு முன்பே தொடங்கி, 1947 ஆம் ஆண்டுக்குப் பிறகு வலுவடைந்தது.




## குஜராத் உருவாக்க தினம் 2026 - மே 01

- ❖ பம்பாய் மாநிலத்திலிருந்து பிரிக்கப் பட்டு 1960 ஆம் ஆண்டு மே 1 அன்று குஜராத் உருவானதை இந்த தினம் குறிக்கிறது.
- ❖ பம்பாய் மறுசீரமைப்புச் சட்டம் (1960)-இன் கீழ் மொழி அடிப்படையில் இந்தப் பிரிவினை செய்யப்பட்டது.
- ❖ தனி மாநிலத்திற்கான போராட்டத்தை மகா குஜராத் இயக்கத்தின் கீழ் இந்துலால் யாக்னிக் முன்னெடுத்தார்.

- குஜராத்தி பேசும் மக்களுக்காக குஜராத் உருவாக்கப்பட்டது, அதே சமயம் மராத்தி பேசும் மக்களுக்காக மகாராஷ்டிரா உருவாக்கப் பட்டது.
- இதன் முதல் தலைநகராக அகமதாபாத் இருந்தது பின்னர் 1970 ஆம் ஆண்டில் அது காந்திநகருக்கு மாற்றப்பட்டது.




## முக்கிய தினங்கள்

### சர்வதேச தொழிலாளர் தினம் 2026 - மே 01



- இது மே தினம் என்றும் அழைக்கப்படுகிறது, மேலும் இது தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் உரிமைகளை கௌரவிக்கிறது.
- அமெரிக்காவின் சிகாகோவில் நடைபெற்ற ஹேமார்க்கெட் நிகழ்விலிருந்து (1886) இந்த நாள் உருவானது.
- இந்தியாவில் முதன்முதலில் 1923-ஆம் ஆண்டு சென்னையில் இந்தியத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி அமைப்பால் இது கொண்டாடப்பட்டது.
- முன்னோடி கம்யூனிஸ்ட் தலைவர் மலையபுரம் சிங்காரவேலு தலைமையில் நடைபெற்ற இந்த வரலாற்று நிகழ்வில், தொழிலாளர்களின் ஒற்றுமையையும் உரிமைகளையும் அடையாளப்படுத்தும் விதமாக இந்தியாவில் முதன்முறையாகச் செங்கொடி பயன்படுத்தப்பட்டது.
- 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Ensuring a Healthy Psychosocial Working Environment" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★